# கோயில் சார்ந்த மெய்ப்பொருளியல் பண்பாடுகள்.

## (உமாபதி சிவாச்சாரியார் அருளிய "கொடிக்கவி" ஓராய்வு)

பால சீனிவாசன்
முனைவர் பட்ட ஆய்வாளர், இளநிலை சட்டவியல்.
மெய்ப்பொருள் துறை, பச்சையப்பன் கல்லூரி, சென்னை-30.
balasrinivasanadvocate@gmail.com

59

**ஆய்வுச் சுருக்கம்**

திருவரங்கத்துக் கோயில் செயல்பாட்டினை கோயில் ஒழுகு என்பர் மால் நெறியார். ஆகமங்களே கோயில் நடப்புகளை வெளிப்படுத்தும் நெறி நூல் என்பார்கள் சிவநெறியாளர்கள். திருக்கோயில்கள் சமூகக் கூடங்கள்" என்று ஆக்கிச் செய்து நூலாகப் பதித்தார் திருவண்ணாமலை ஆதீனத்தலைவர் பெரியவர் குன்றக்குடி அடிகளார்.

தமிழர்கள், வாழ்வியல் கற்கக் களமாக அமைந்தவை திருக்கோயில்கள், திருக்கோயில்கள் குழந்தைக்குத் தாய்ப்பால் நிறுத்தப்பட்டுப் பருப்பும் சோறும் ஊட்டத் தலைப்படும் தருவாய் முதல் உயிரற்ற உடல் கிடத்திப் பதிகம் பாடி எழுப்பும் வரையில் பல நிகழ்வுகள் கோயில்களில் நிகழ்த்தப் பட்டிருக்கின்றன.

கட்டளைக் கலித்துறைப்பாடல் ஒன்றும் வெண்பாப் பாடல்கள் மூன்றுமாக நான்கு பாடல்கள் மட்டுமே கொண்டது இந்நூல். திருவருள் பேரறிவாகிய ஒளியும். ஆணவ இருளுமாக இருப்பது உயிர். இவை இரண்டில் ஒன்று முன் நின்றால் மற்றது மறைத்து நிற்கும் ஆனால் ஒருபோதும் ஆணவஇருள் பேரறிவொளியை விஞ்சாது. இறையருளே பெற்ற போதினும் ஆணவம் சற்று விலக்கி மீண்டும் உயிர் மும்மலங்களுள்ளும் மூழ்கவே செய்யும். அப்படி மலங்களில் மூழ்கிய உயிரை விடுவிக்கவே இக்கொடியைக் கட்டுகிறேன் என்று முதற்பாடல் தொடங்குகிறார் மெய்ப்பொருள் எது? அதன் ஆற்றல் என்ன? அது வெளிப்படுவது எவ்வண்ணம்? கண்ணாக விளங்கும் உள்ளுயிர் எது? கண் மறைக்கும். இருள்ஏது அவ்விருள் தாங்கும் இரவு ஏது? அருள் வழங்கும் பெருமானே உன்னால் காக்கப் படுகின்ற உலகமெல்லாம் இவைகளை அறிந்து கொள்ளும் பொருட்டு கோபுர வாயிலில் கொடிகட்டினேன்.

சொல்லால், மனத்தால், எக்காலத்தாலும் எட்டவே இயலாத அரிய தன்மையானவனை பிரியாமல் இருக்கின்ற அருள் நிலையைப் பெற்றிடும் அருளை வழங்கவேண்டி கொடி கட்டுகிறேன். சிவயநம என்பது ஐந்தெழுத்து, ஓம்,ஆம்,ஔம் என்றமூன்றும் சேர்ந்து எட்டு எழுத்தாக, ஓம் நமசிவய என்ற ஆறெழுத்து ஓம் சிவய என்ற நான்கெழுத்து, சத்தியைக் குறிக்கும் வகரமாகிய பிஞ்செழுத்தும், சிவத்தைக்குறிக்கும் முதலாவதாகிய 'சி' எனும் மேலெழுத்து (பெருவெழுத்தும்) இவற்றை நெஞ்சகத்தில் பதியச்செய்து தொடர்ந்து ஓதிவரும் போது பேசும் எழுத்தாகிய 'வ' பேசா எழுத்தாகிய 'சி' இவை உயிர்களுள் எளிதாகக் கூடும்படிக்குக் கொடிகட்டிக் காட்டுகிறேன். உமாபதி சிவாச்சாரியார், உயிர்கள் மெய்ப் பொருளை உணரத் தாமே ஆசானாக விளங்கி கொடிக்கவி மூலம் நீம் மனதைப் பண்படுத்தி

நெறி காட்டுவதாக அறியலாம். திருவரங்கத்துக் கோயில் செயல்பாட்டினை கோயில் ஒழுகு என்பர் மால் நெறியார். ஆகமங்களே கோயில் நடப்புகளை வெளிப்படுத்தும் நெறி நூல் என்பார்கள் சிவநெறியாளர்கள்.

திருக்கோயில்கள் சமூகக் கூடங்கள்" என்று ஆக்கிச் செய்து நூலாகப்பதித்தார் திருவண்ணாமலை ஆதீனத்தலைவர் பெரியவர் குன்றக்குடி அடிகளார். தமிழர்கள், வாழ்வியல் கற்கக் களமாக அமைந்தவை திருக்கோயில்கள், திருக்கோயில்கள் குழந்தைக்குத் தாய்ப்பால் நிறுத்தப்பட்டு ப்பருப்பும் சோறும் ஊட்டத் தலைப்படும் தருவாய் முதல் உயிரற்ற உடல் கிடத்திப் பதிகம் பாடி எழுப்பும் வரையில் பல நிகழ்வுகள் கோயில்களில் நிகழ்த்தப் பட்டிருக்கின்றன.

அவற்றுள்ளும் 'கொடி' ஏற்றுதல் முதல் நிகழ்வு. திருஞானசம்பந்தர் திருவெண்காட்டிறைவனை "கொடியான்" என்றே அழைக்கிறார்.

"கண்காட்டும் நுதலானும்
கனல் காட்டும் கையானும்
பெண் காட்டும் உருவானும்
பிறை காட்டும் சடையானும்
பண்காட்டும் இசையானும்
பயிர் காட்டும் புயலானும்
வெண்காட்டில் உறைவானும்
விடைகாட்டும் கொடியானே." -திருஞானசம்பந்தர் அருளிய திருக்கடைக் காப்பு இரண்டாம் திருமுறை- திருவென்காடு - முதற் பாடல்.

மணிவாசகப் பெருந்தகை தாம் அருளிய திருவாசகத்துத் திருப்பள்ளி எழுச்சியுள் போற்றி என் வாழ்முதலாகிய பொருளே.... எனத்தொடங்கி

**"திருப்பெரும் துறையுறை சிவபெருமானே**
**ஏற்றுயர் கொடியுடையாய் எனை உடையாய்**
**எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே.**" - என்று அழைத்து எழுப்புகிறார்.

காலம் அறியப்படா காலத்திலிருந்து திருக்கோயில்களில் "கொடி" இன்றியமையா இடத்தைப் பற்றிக் கொண்டது எனலாம்.தமிழர்தம் திருக்கோயில்கள் அனைத்திலும், குறிப்பாகப் பாடல்பெற்ற கோயில்களில் "கொடிமரம்" தவிர்க்க இயலா இடம் கொண்டு நிற்கிறது.

கொடிமரத்தை வணங்கியே கோயில் வழிபாட்டைத் தொடரும் முறைமையையே பெருங்கோயில்கள் அனைத்திலும் காணலாம். ஏனைய பொது இடங்களில் அமையப் பெற்றிருக்கும் கொடிகள் போலன்றித் திருக்கோயில்களில் சிறப்புத் தன்மையுடன் கூடிய, வாழ்வியலை, அதனினும் குறிப்பாக மெய்ப் பொருள் சார்ந்த செயல்முறையைக் காட்டும் வகையில் கொடி, கொடிமரம்' 'கொடி ஏற்றம்', 'கொடி இறக்கம் அனைத்தும் இருத்தவும் நிகழ்த்தவும் படுகின்றன. தமிழகக் கோயில் பெருவிழாக்களில் தொடக்க நிகழ்வாகக் கொடி ஏற்றமே நடத்தப்படுகிறது.

பெருவிழா நிறைவுற்ற நாளில் முறைப்படி கொடி இறக்கம்' நிகழ்ச்சியும் நடத்தப்படுகிறது. கோயில்

குளங்கள் நம் உடலின் புறத் தூய்மைக்கென அமைக்கப் பட்டுள்ளது போல உள்ளமாம் அகத் தூய்மைக்கு என அமையப்பெற்றதே 'கொடிஏற்றம்'

**கொடி ஏற்றம்'**

பண்பாடு- 'வாழ்வியல்'-மெய்ப்பொருளியல்,

கொடிமரத்தின் உச்சி சிவனடியாகும். கொடித்துணி உலகம் என்ற பொருள்படும். கொடித்துணியில் பொதிந்துள்ள உருவம் (இடபம்) உயிர்களைக்குறிக்கும். கொடியையும் உச்சியையும் இணைத்துள்ள தருப்பைக் கயிறு ஆற்றல், சத்தி, குரு என்றெல்லாம் பொருள் கொள்ளப்பட்டும் வருகின்றன.

**சைவ சித்தாந்த முப்பொருள் முதன்மை**

சைவ சித்தாந்தம் இறை, உயிர், தளை என்ற மூன்று முதன்மைப் பொருள்களை உடையது இதை முப்பொருள் உண்மை என்றும் முப்பொருள் முதன்மை என்றும் முறைப்படி அழைப்பர்.

வடமொழியாம் சம்ஸ்கிருதத்தில் பதி,பசு, பாசம் என்று கூறுவர்.உயிர்கள் இறைவனை அடைய வேண்டுவது பிறப்பின் நோக்கம். ஆனால் உலகின் போக்கில் ஆணவம், கன்மம், மாயை எனும் தளை அல்லது கட்டுகளால் தடைபட்டு உயிர்கள் இறைவனை அடைய முடியாமல் தவிக்கின்றன.

ஆசானாகியகுருவின் ஆற்றலோ, சத்தியின் அருளாற்றலோ உயிர்களை தளை என்னும் கட்டுகளில் இருந்து விடுவிக்கப்பட்டு பண்பட்ட உள்ளுயிர்களாக ஆக்கி இறைவன் திருவடியில் சேர்க்கின்றன.

**கொடி ஏற்றமும் முதன்மை முப்பொருளும்**

கொடியை ஏற்றுவது என்பது உயிர்களை இறைவன் திருவடிகளில் அடைவிப்பதன் உருவகம் அல்லது குறியீடாகும்.உலகமாகிய கொடித்துணியின் அசைவுக்கு ஏற்ப இடபமாகிய உயிர்கள் தம்மை மறந்து பிழைக்கப் பழக்கப்பட்டு விடுகின்றன. அந்த உயிர்களைப் பக்குவமாகக் கட்டுக்குள் கொண்டுவந்து சிறிது சிறிதாக ஏற்றம் பெறச் செய்து கொடிமரத்தன் உச்சியாகக்குறியிட்ட இறைவனது திருவடியைக் கயிறாக ஆசான் ஆற்றல் இணைத்துவிடுகிறது.

**கொற்றவன்குடி உமாபதி சிவாச்சாரியார்**

**வரலாற்றுச் சுருக்கமும் கொடிக்கவியும்!**

தில்லை எம்பெருமானைத் தீண்டிப் பூசனை செய்யும் தில்லைவாழ் அந்தணரில் ஒருவர் உமாபதிசிவம். இவர் மறைஞான சம்பந்தர் என்ற வேளாளரை ஆசானாக ஏற்கிறார். அந்தணர்களின் வெறுப்புக்கு ஆளாகிறார். அஃதன்றி பூசனைக்குரிய இறை திருமேனியை இவரே கவர்ந்தவர் என்று குற்றம் சாட்டப்படுகிறார். தில்லையிலிருந்து வெளிபேற்றப்பட்டதால் அவர் கொற்றவன் குடிக்குச் சென்றார் (இன்று அண்ணாமலைப் பல்கலைக்கழகம் மருத்துவக் கல்லூரி அமைந்த நடராசபுரம்)

தில்லைத் திருக்கோயில் திருவிழா வருகிறது. அந்த நாள் உமாபதியாரின் முறையாக இருந்தது. மாற்றாக ஒருவர் கொடியேற்றுவிக்க அக்கொடி ஏறாமல் தடைபட்டது. அப்போது வானொலியாக உமாபதி வந்தால் கொடி ஏறும் எனும் ஒலி எழுத்தது. அனைவரும் கொற்றவன்குடி சென்று உமாபதியாரிடம் மன்னிக்க வேண்டி நடந்தவற்றைக் கூற உமாபதியாரும் வந்தார். கொடிக்கவி பாடப்பாட கொடி தாமாகவே ஏறியதாக வழிவழியான மரபுவழிச்செய்தி கூறுகிறது.

**உமாபதி சிவாச்சாரியார் அருளியவை.**

**சாத்திர நூல்கள்:-**

14இல் 8 நூல்கள்.

1. சிவப்பிரகாசம் 2, திருவருட்பயன் 3. வினாவெண்பா

4. போற்றிப் பஃறொடை 5. கொடிக்கவி 6. நெஞ்சுவிடுதூது.

7. உண்மை நெறி விளக்கம் 8. சங்கற்ப நிராகரணம்.

**தமிழ் நூல்கள்:-**

1. கோயிற் புராணம் 2. திருப்பதிகக் கோவை 3. சேக்கிழார் புராணம் 4. திருமுறைகண்ட புராணம் 5. திருத்தாண்டர் புராண சாரம் 6. தேவார அருள்முறைத் திரட்டு. 7. திருப்பதிகக் கோவை.

**வடமொழி நூல்கள்:-**

1. பௌஷ்கர பாஷ்யம் 2 . சதரத்ன சங்கிரகம் 3.குஞ்சிதாங்கிரிஸ்தலம் 4. நடராஜ த்வனி மந்திரஸ் தலம்.

**உரைநூல்கள்:-**

1. நடராஜ் ஸகஸ்ரநாமம் 2. ஸ்ரீருத்ரம் 3.வாயு சம்ஹிதை 4. யந்திரவிதானம்.

**கொடிக்கவி**

கட்டளைக் கலித்துறைப்பாடல் ஒன்றும் வெண்பாப் பாடல்கள் மூன்றுமாக நான்கு பாடல்கள் மட்டுமே கொண்டது இந்நூல். திருவருள் பேரறிவாகிய ஒளியும். ஆணவ இருளுமாக இருப்பது உயிர். இவை இரண்டில் ஒன்று முன் நின்றால் மற்றது மறைத்து நிற்கும் ஆனால் ஒருபோதும் ஆணவஇருள் பேரறிவொளியை விஞ்சாது. இறையருளே பெற்ற போதினும் ஆணவம் சற்று விலக்கி மீண்டும் உயிர் மும்மலங்களுள்ளும் மூழ்கவே செய்யும். அப்படி மலங்களில் மூழ்கிய உயிரை விடுவிக்கவே இக் கொடியைக் கட்டுகிறேன் என்று முதற்பாடல் தொடங்குகிறார்

**“ஒளிக்கும் இருளுக்கும் ஒன்றே இடம்**
**ஒன்று மேலிடில் ஒன்று ஒளிக்கும்**
**எனினும் இருள் அடராது**
**உள்ளுயிருக்குயிராய்த்**
**தெளிக்கும் அறிவு திகழ்ந்துளதேனும்**
**திரிமலத்தே குளிக்கும் உயிர்**
**அருள் கூடும்படி. கொடிகட்டினனே” பாடல் -1**

மெய்ப்பொருள் எது? அதன் ஆற்றல் என்ன? அது வெளிப்படுவது எவ்வண்ணம்? கண்ணாக விளங்கும் உள்ளுயிர் எது? கண் மறைக்கும். இருள்ஏது அவ்விருள் தாங்கும் இரவு ஏது? அருள் வழங்கும் பெருமானே உன்னால் காக்கப் படுகின்ற உலகமெல்லாம் இவைகளை அறிந்து கொள்ளும் பொருட்டு கோபுர வாயிலில் கொடிகட்டினேன்.

**“பொருளாம் பொருள் ஏது போது ஏது கண்ஏது**
**இருளாம் வெளியேது இரவேது -அருளாளா**
**நீபுரவா வையமெலாம் நீயறியக் கட்டினேன்**

**கோபுர வாசல் கொடி "** **பாடல் - 2.**

சொல்லால், மனத்தால், எக்காலத்தாலும் எட்டவே இயலாத அரிய தன்மையானவனை பிரியாமல் இருக்கின்ற அருள் நிலையைப் பெற்றிடும் அருளை வழங்கவேண்டி கொடி கட்டுகிறேன்.

**"வாக்காலும் மிக்க மனத்தாலும் எக்காலும்**
**தாக்காது உணர்வரிய தன்மையனை – நோக்கிப்**
**பிறித்தறிவு தம்மில் பிரியாமை தானே**
**குறிக்கும் அருள் நல்கக் கொடி?"** **பாடல் - 3.**

சிவயநம என்பது ஐந்தெழுத்து, ஓம்,ஆம்,ஔம் என்றமூன்றும் சேர்ந்து எட்டு எழுத்தாக, ஓம் நமசிவய என்ற ஆறெழுத்து ஓம் சிவய என்ற நான்கெழுத்து, சத்தியைக் குறிக்கும் வகரமாகிய பிஞ்செழுத்தும், சிவத்தைக்குறிக்கும் முதலாவதாகிய 'சி' எனும் மேலெழுத்து (பெருவெழுத்தும்) இவற்றை நெஞ்சகத்தில் பதியச்செய்து தொடர்ந்து ஓதிவரும் போது பேசும் எழுத்தாகிய 'வ' பேசா எழுத்தாகிய 'சி' இவை உயிர்களுள் எளிதாகக் கூடும்படிக்குக் கொடிகட்டிக் காட்டுகிறேன்.

**"அஞ்செழுத்தும் எட்டெழுத்தும் ஆறெழுத்தும் நாலெழுத்தும்**
**பிஞ்செழுத்தும் மேலைப் பெருவெழுத்தும் -நெஞ்சழுத்திப்**
**பேசும் எழுத்துடனே பேசா எழுத்தினையும்**
**கூசாமல் காட்டக் கொடி."** **பாடல் - 4**

உமாபதி சிவாச்சாரியார், உயிர்கள் மெய்ப் பொருளை உணரத் தாமே ஆசானாக விளங்கி கொடிக்கவி மூலம் நம் மனதைப் பண்படுத்தி நெறி காட்டுவதாக அறியலாம்.